***கவனிக்க.***- *30.08.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1774 - 2012 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.08.30**

*1774 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1276 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |
| | - |


***கவனிக்க.***- *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2009 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி - மாச்சு) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பி. கே. எஸ். ரவீந்திர,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யுன் மாதம் 23 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

**உடபலாத்த பிரதேச சபை**

**துணைவிதிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டமூலத்தின் 126 ஆவது வகுதியின் (VII) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடபலாத்த பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப் படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருநது மேற்குறித்த துணை விதிகள் உடபலாத்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சரும்,
மத்திய மாகாணம்,
கண்டி.

முதலமைச்சர் அலுவலகம்,
மத்திய மாகாண மாகாண சபை,
கண்டி,
2012.07.06.

**வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்**

01. இந்தத் துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது, கட்டுப்படுத்துவது, நெறிப்படுத்துவது, கட்டணங் களை அறவிடுவது தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.

02. பிரதேச சபையின் மூலம் அனுமதிக்கப்பட்டு, தலைவரினால் அறிவிக்கப்பட்டு இங்கு முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள இடங்கள் தவிர, வேறு எந்த இடங்களிலும் வாடகைக்காக ஓடும் நோக்கத்துடன் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இடங்களை மாற்றியமைக்கவோ, புதிய இடங்களைப் பெயரிடவோ முடியும்.

03. உடபலாத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் இரண்டாவது துணை விதிக்கமைய முதலாவது அட்ட வணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தையும், அதற்குரிய அரச கட்டணங்களையும் சபையிடம் மாதாந்தம் செலுத்திய பின்னர் உரிய இடங்களில் வாடகை வாகனங்களை நிறுத்தி வைத்தல் வேண்டும். அந்த வாடகை வாகனங்கள் சபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். கட்டணங்கள் காலத்துக்குக்காலம் சபையின் மூலம் தீர்மானம் செய்யப்பட முடியும். கட்டணத் திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் நடைமுறைக்கு வரும்.

04. பிரசே சபையின் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரேனும் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள, இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடங்களில் மோட்டார் வாகங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. இந்த நடைமுறை முற்பகல் 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை செயற்படுத்தப்படும்.

05. இந்தத் துணை விதிகளின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரமும் தலைவரால் அல்லது அவரது அதி காரம் வழங்கப்பட்ட ஒருவரினால் இரத்துச் செய்யப்பட்டா லன்றி, அதன் செல்லுபடிக் காலம், அது வழங்கப்பட்ட உரிய மாதத்தின் கடைசித் திகதியுடன் முடிவடையும்.

06. அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெறுவதற்காக சபை விநியோகிக்கும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறான விண்ணப்பப் படிவத்தை உரிமையாளர் அல்லது சாரதி, சபையின் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.

07. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு வாகனம் தொடர்பான அனுமதிப் பத்திரத்தைக் காட்டும் வண்ணம் உரிமையாளரிடமோ அல்லது சாரதியிடமோ வாகனக் கட்டுப்பாட்டாளர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் வேண்டிக் கொள்ளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைப் பரிசீலிப்பதற்காக அவர் முன்வைத்தல் வேண்டும்.

08. மாதத்தின் முதலாம் திகதிக்கு முன்னர் உரிய மாதத்துக்கான வாகனம் நிறுத்தி வைப்பதற்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

09. உடபலாத்த பிரதேச சபையின் மூலம் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி எந்தவொரு வாகனத்தையும் வாகனத் தரிப்பிடத்தில் நுழைத்தல் கூடாது.

10. நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வாகனத் தரிப்பிடமொன்றில் இருந்து வாகனத்தை 14 நாட்களுக்குக் குறையாத காலத்துக்கு அகற்றிக்கொள்ள நேர்ந்தால் அது பற்றி சபையிடம் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல் ஏதும் செயற்படாதவிடத்து, உரிய மாதத்துக்கான கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

11. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் எந்தவொரு வாகனத்தையும் திருத்தம் செய்வதோ, கழுவுவதோ அல்லது கழுவச் செய்வதோ கூடாது.

12. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் அல்லது வாகனம் ஒன்றினுள் எவரேனும் குடிபோதையிலோ, தகாத முறையிலோ அல்லது ஏனையோருக்கு இடையூறு ஏற்படும் விதத்திலோ நடந்து கொள்வது கூடாது.

13. இந்தத் துணை விதிகளின் எந்தவொரு ஏற்பாட்டையும் மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதிகாரம் கொண்ட நீதிமன்றம் இதனைக் குற்றமாகக் கருதி விதிக்கும் உச்ச அளவுத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும். மேலும் இந்த மீறல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால், அல்லது இது பற்றிய கவனத்தை ஈர்த்துத் தலைவரது அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரது எழுத்துமூல அறிவித்தலைப் பெற்ற பின்னரும் மீறப்பட்டால் அவ்வாறு மீறப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் மேலதிகத் தண்டத்துக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் 2 ஆவது உப பிரிவின்படி உட்படுதல் வேண்டும்.

14. உரிய அதிகாரங்களைக் கொண்டுள்ள நீதிமன்றம் விதிக்கும் வேறு ஏதும் தண்டத்துக்கு மேலதிகமாக இந்தத் துணை விதிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் மீறிய குற்றத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரது பதிவு இரத்துச் செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும். மேலும், அவ்வாறு இரத்துச் செய்வது தொடர்பாக எந்தவித நட்டஈட்டையும் பெற அவருக்கு உரித்து இல்லை.

15. பதங்கள் பற்றிய தெளிவு தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணைவிதிகளில் ''சபை'' என்பது உடபலாத்த பிரதேச சபையும்,

''தலைவர்'' என்பது உடபலாத்த பிரதேச சபையின் தலைவரையும்,

''அதிகாரம் பெற்ற அலுவலர்'' என்பது உடபலாத்த பிரதேச சபையின் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரையும்,

''வாகனக் கட்டுப்பாட்டாளர்'' என்பது உடபலாத்த பிரதேச சபை நியமித்துள்ள வாகனங்களைக் கட்டுப்படுத்தும் அலுவலரையும்,

''மோட்டார் வாகனம் அல்லது வாடகை வாகனம்'' என்பது முச்சக்கர வண்டியையோ, லொறி வண்டியையோ, ட்ராக் வண்டியையோ, மோட்டார் வானையோ, திராக்டரையோ, மோட்டார் காரையோ, இரண்டு சக்கர திராக்டரையோ குறிக்கும்.

இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

### அட்டவணை - 01

உடபலாத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள இடங்கள் :

01. புசல்லாவை நகர மண்டபத்தின் எதிரில் 20 மீற்றர் நீளத்துக்கு
02. புசல்லாவை சிங்கர் நிறுவனத்தின் எதிரில் 20 மீற்றர் நீளத்துக்கு
03. புசல்லாவை பழைய பஸ் நிலையத்தின் எதிரில் 20 மீற்றர் நீளத்துக்கு
04. புசல்லாவை கள்ளுத் தவறணையின் புகுவழி அருகில் 20 மீற்றர் நீளத்துக்கு
05. வகுகாப்பிட்டிய மருத்துவமனை அருகில் 15 மீற்றர் நீளத்துக்கு
06. வகுகாபிட்டிய நகரின் சப்ளி கொலனிக்குத் திரும்பும் சந்தியிலிருந்து 15 மீற்றர் நீளத்துக்கு
07. பாரதெக்க நகரின் சந்தியில் 15 மீற்றர் நீளத்துக்கு
08. அட்டபாகே சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
09. தல்பிட்டிய சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
10. நவதேவிட்ட சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
11. மொரகொல்ல சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
12. உடகம சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
13. துனுகேஉல்ல சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
14. பாரபஹ சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
15. தொரகல சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
16. புபுரஸ்ஸ நகரச் சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
17. பன்விலதன்ன சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
18. மில்லகஹமுல சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
19. வாரியகல சந்தியில் 15 மீற்றர் நீளத்துக்கு
20. நில்லம்ப சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
21. மெகொட களுகமுவ - பிஹிம்பியஹேன சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
22. தொலுவ சந்தியில் வாரச்சந்தை எதிரில் 20 மீற்றர் நீளத்துக்கு
23. கொடவெல சந்தியில் தொலுவ வீதி ஊடாக 20 மீற்றர் நீளத்துக்கு
24. பீங்கான் கூட்டுத்தாபன சந்தியில் கலஹா வீதியூடாக 20 மீற்றர் நீளத்துக்கு
25. ஹல்ஓய 9 கட்டை சந்தியில் கலஹா வீதியூடாக 20 மீற்றர் நீளத்துக்கு
26. அப்புகடை சந்தியில் கலஹா வீதியூடாக 20 மீற்றர் நீளத்துக்கு
27. நில்லம்ப அலுவலக சந்தியில் கலஹா வீதியூடாக 20 மீற்றர் நீளத்துக்கு
28. மாவத்துர சந்தியில் கலஹா வீதியூடாக 20 மீற்றர் நீளத்துக்கு
29. இங்குருவத்த சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
30. ஆண்டியாகடவத்த பள்ளி அருகில் 20 மீற்றர் நீளத்துக்கு
31. பள்ளேவெல பாலம் அருகில் 20 மீற்றர் நீளத்துக்கு
32. போவெல பிந்தாளிய சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
33. கஹவத்தையில் 20 மீற்றர் நீளத்துக்கு
34. எகொட களுகமுவயில் 20 மீற்றர் நீளத்துக்கு
35. இலங்கவத்தையில் 20 மீற்றர் நீளத்துக்கு
36. நாரங்விற்ற விளையாட்டு மைதானம் அருகில் 20 மீற்றர் நீளத்துக்கு
37. போவெல வெவ்பிட்டியவில் 20 மீற்றர் நீளத்துக்கு
38. நில்லம்ப புதிய நகரில் 20 மீற்றர் நீளத்துக்கு
39. முல்கமவில் 20 மீற்றர் நீளத்துக்கு
40. பள்ளே லகும்தெனியவில் 20 மீற்றர் நீளத்துக்கு
41. வெவதன்ன பாடசாலை அருகில் 20 மீற்றர் நீளத்துக்கு
42. லெவலண்ட்வத்த 20 மீற்றர் நீளத்துக்கு
43. வாரியகல இல்லகொல்ல சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு
44. கணேகொடயில் 20 மீற்றர் நீளத்துக்கு
45. நில்லம்ப நீர்த்தாங்கி அருகில் 20 மீற்றர் நீளத்துக்கு
46. ஸ்டோபீஸ்ட் சந்தியில் 20 மீற்றர் நீளத்துக்கு

### அட்டவணை - 02

வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான மாதாந்தக் கட்டணம்

| | | ரூபா ச. |
|---|---|---|
| 01. | லொறி ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | 500 0 |
| 02. | மோட்டார் வான் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | 500 0 |
| 03. | ட்ரேலருடனான திராக்டர் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | 250 0 |
| 04. | முச்சக்கர வண்டி ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | 100 0 |
| 05. | மோட்டார் கார் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | 500 0 |
| 06. | கை திராக்டர் ஒன்றுக்கான மாதாந்தக் கட்டணம் | 250 0 |

**அட்டவணை - 03**

அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பப்படிவம்

01. வாகன வகையும் இலக்கமும் :----.
02. உரிமையாளரது பெயர் :----.
03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
04. உரிமையாளரது முகவரி :----.
05. சாரதியின் பெயர் :----.
06. சாரதியின் ஆளடையாள அட்டை இலக்கம் :----.
07. சாரதியின் அனுமதிப்பத்திர இலக்கம் :----.
08. சாரதியின் முகவரி :----.
09. வாகனத்தை நிறுத்த உத்தேசித்துள்ள தரிப்பிடம் :----.
10. வாகனம் பயன்படுத்தப்படும் நோக்கம் :----.
11. அதன் கொள்ளளவும் நிறையும் :----.

மேற்காட்டிய தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின்/சாரதியின்
கையொப்பம்.

திகதி :----.

தலைவரது அங்கீகாரம் :

ரூ. .......................... இற்கான கட்டணமொன்றை அறவிட்டபின் அனுமதிப்பத்திரத்தை வழங்க அங்கீகாரம் வழங்குகின்றேன்/ வழங்கவில்லை.

----,
தலைவர்,
உடபலாத்த பிரதேச சபை,
தல்பிட்டிய - அட்டபாகே.

திகதி :----.

8-786/1

---

**உடபலாத்த பிரதேச சபை**

**துணைவிதிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த சட்டமூலத்தின் 126 ஆவது பிரிவின் (VII) உப பிரிவுகளின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, உடபலாத்த பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள தகனசாலைகள் பற்றிய துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டமூலத்தின் 2 ஆவது உப பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 123 ஆம் பந்தியின் (1) ஆவது உப பிரிவின்படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சரான சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் உடபலாத்த பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயலுக்கு வரும் என்பதையும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சரும்
மத்திய மாகாணம்,
கண்டி.

மத்திய மாகாண மாகாண சபை,
முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2012.07.06.

**உடபலாத்த பிரதேச சபை**

**தகனசாலைகள் பற்றிய துணை விதிகள்**

01. இந்தத் துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபைக்குச் சொந்தமான தகனசாலைகளை நடத்திச் செல்லும், அவற்றை நெறிப்படுத்தும், பரிசீலனை செய்யும், கட்டணங்கள் அறவிடும் துணை விதிகள் என அழைக்கப்படும்.

02. இந்தத் துணைவிதிகள் உடபலாத்த பிரதேச சபைக்குச் சொந்தமான தகனசாலைகளைப் பயன்படுத்துதல், நிருவகித்தல், அவற்றைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களைத் தீர்மானித்தல், அறவிடுதல் என்பவற்றுக்காக விதிக்கப்படுகின்றன.

03. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலர் மூலமாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி சபைக்குச் சொந்தமான தகனசாலையொன்றில் எந்தவொரு இறந்த உடலையோ, உடலின் பகுதியையோ அல்லது மனித முளையத்தையோ தகனம் செய்தல் கூடாது.

04. மூன்றாவது துணை விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற விண்ணப்பிக்கும் ஒருவர் ''1'' அட்டவணையில் தரப்பட்டுள்ளதற்கிணங்கத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் ஆவணங்களுடன் தலைவரிடம் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) விண்ணப்பிப்பவர் இறந்தவரது உறவினர் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு ஆவணம். (இறந்தவரது வதிவிட கிராம அலுவலர் அல்லது பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர் ஒருவர் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ் இதற்கெனப் போதுமானது. விண்ணப்பிப்பவரது பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் போன்ற ஆவணங்களை அடிப்படையாக வைத்து இறந்தவரது உறவை உறுதிப்படுத்தும் சான்றிதழேனும் போதுமானது)

(ii) விண்ணப்பிப்பவரது ஆளடையாள அறிமுக அட்டையின் போட்டோ பிரதி அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதியொன்று விண்ணபபிப்பவரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தப்போதுமானது.

(iii) 1975 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க விவாக, பிறப்பு, இறப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட பிறப்பு, இறப்புகளைப் பதிவுசெய்யும் கட்டளைச் சட்டத்தின் 110 ஆவது அத்தியாயத்தின் 11 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பிறப்பு, இறப்பு பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழில் உடபலாத்த பிரதேச சபையின் தகனசாலையில் தகனம் செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) இறந்தவரது இறப்பு தொடர்பில் குற்றவியல் நீதி விசாரணையின் கீழ் விசாரணைகள் நடத்தப்படுவ தாயின், விசாரணை செய்த நீதிபதி அல்லது மரண விசாரணை அதிகாரி பிறப்பு, இறப்பு பதிதல் சட்டமூலத்தின் 41(இ) பிரிவின்கீழ் இறந்த உடலைத் தகனம் செய்ய முடியும் என்று குறிப்பிட்டு வழங்கிய சான்றிதழ்.

(v) இறந்தே பிறந்த உடலெனின், பிறப்பு இறப்பு பதிவு செய்யும் சட்டமூலத்தின் 41 (1) ஆவது பிரிவின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ்.

05. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களைத் தலைவரிடம் கையளித்த பின், அவை கிடைக்கப்பெற்ற ஒழுங்கின்படி பதிவுசெய்து கோவைப்படுத்தப்படும். அந்த ஒழுங்கின்படியே தகனம் செய்யப்படும் நேரம் தீர்மானிக்கப்படும்.

06. இறந்த உடலைத் தகனம் செய்வதற்காக ரூபா 6,000 க்கான கட்டணத்தைப் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும். கட்டணத் தொகை பிரதேச சபையின் அங்கீ காரத்துடன் காலத்துக்குக் காலம் திருத்தம் செய்யப்பட முடியும். இவ்வாறான கட்டணங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். இந்த விபரங்கள் பிரதேச சபை அலுவலகத்திலும் தகனசாலைகளிலும் காட்சிப்படுத்தப் படுதல் வேண்டும்.

07. இறந்த உடலைத் தகனம் செய்யப் பொறுப்பேற்க முடியாதெனின், அதற்கான காரணத்தை விண்ணப்பிப்ப வருக்கு எழுத்து மூலம் உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்.

08. தகனம் செய்வதற்காக இறந்த உடல்கள் வாரத்தின் எந்தவொரு நாளிலும் முற்பகல் 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரை மட்டுமே கையளிக்கப்படுதல் வேண்டும். முற்பகல் 6.00 மணிக்கு முன்னர் தகனத்துக்காகப் பெறப்பட்ட உடல் பிற்பகல் 6.00 மணியின் பின்னரேனும் தகனம் செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும்.

09. அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிப்பவர் இறந்த உடலைத் தகனசாலையின் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். குறித்த நேரத்தில் இறந்த உடலைக் கையளிக்க முடியாமற்போன காரணங்களினால் ஏற்படும் நட்டங் களையும், வசதியீனங்களையும் பிரதேச சபை பொறுப் பேற்காது.

10. ஒவ்வொரு தகனசாலையிலும் தகனம் செய்யப்பட்ட ஒவ்வொரு உடலினதும் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி, இறந்தவரது பெயர், இறப்பதற்கு முன்னர் அவர் வசித்த இடத்தின் முகவரி, விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் இடையிலுள்ள உறவு, தகனம் செய்யப்பட்ட திகதி, நேரம் போன்ற தகவல்களைத் தகனசாலையின் பொறுப்பாளர் பதிவுசெய்து வைத்திருத்தல் வேண்டும்.

11. உடலொன்று தகனசாலையில் தகனம் செய்யப்படும்போது இயந்திரக் கோளாறு காரணமாகத் தகனம் செய்ய முடியாது போயின், சபையின் ஆலோசனைக்கமைய உடல் பற்றிய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள விண்ணப்பிப்பவர் இணங்குதல் வேண்டும்.

12. இறந்த உடல் தகனம் செய்யப்பட்டு 72 மணி நேரம் கழிவதற்கு முன்னர் விண்ணப்பிப்பவர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி அதன் அஸ்தியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். உரிய நேரத்துக்குள் பொறுப் பேற்கப்படாத அஸ்தியை எவ்வகையிலேனும் அகற்றிவிடுதல் சட்டபூர்வமானதாகும்.

13. தகனசாலைப் பொறுப்பாளர் அல்லது தலைவரது அனுமதியின்றித் தகனசாலையின் வளவுக்குள் நுழைவது குற்றமாகும். எனினும், இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான அனுமதியை வைத்திருப்பவருடன் வருபவருக்கு அல்லது வருவோருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும்.

14. தகனசாலையின் வளவுக்குள் அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்வதும், தகனசாலையின் வளவுக்குள் அமைந்துள்ள சபையின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதும், தகனசாலையின் பொறுப்பாளர் அவரது உதவியாளர்களது கடமைகளில் இடையூறு விளைவிப்பதும் கூடாது. இவ்வாறான சேதங்கள் ஏற்படின், விண்ணப்பதாரி அதற்கான பொறுப்பை ஏற்றல் வேண்டும். சேதங்களை மதிப்பிட்ட பின்னர் அவற்றின் பெறுமதியை விண்ணப்பதாரி செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் அந்தத் தொகையை அறவிட்டுக் கொள்வது சட்டபூர்வமான தாகும்.

15. பிரதேச சபையின் எழுத்துமூல அனுமதியின்றித் தகனசாலையின் வளவை அலங்கரித்தல் கூடாது.

16. பராமரிப்புக்காகவும், திருத்தவேலைக்காகவும் எப்போதேனும் தகனசாலையை மூடிவைக்கவேண்டி ஏற்படின், அதுபற்றிய அறிவித்தலைத் தகனசாலையில் பகிரங்கமாகத் தெரியும் இடத்தில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

17. இந்தத் துணைவிதிகளின் ஏதேனுமொன்றை மீறுவது குற்றமாகும். அதிகாரம் கொண்ட நீதிமன்றம் ஒன்று அவ்வாறான ஒருவரைக் குற்றவாளியாகக் காணும் பட்சத்தில் அதற்கான உச்சதண்டத்தைச் செலுத்துவதற்கும், தொடர்ச்சியாக இந்தக் குற்றத்தைச் செய்துவருபவருக்கு அதுபற்றி அறிவித்த பின்னரும் அதே குற்றத்தைத் தொடர்ந்து செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் என உச்ச அளவிலான தண்டத்தைச் செலுத்துவதற்கும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச தண்டத்தைச் செலுத்துவதற்கும் ஒருவர் உட்படுவார்.

18. சொற்பிரயோகங்களுக்கான அர்த்தம் தேவைப்பட்டாலன்றி,
"சபை" எனப்படுவது உடபலாத்த பிரதேச சபையையும்,
"தலைவர்" எனப்படுவது நடைமுறை வழக்கிலுள்ள எழுத்துமூல ஏற்பாடுகளின் கீழ் உடபலாத்த பிரதேச சபைக்குத் தெரிவாகும் தலைவர் அல்லது தலைவரது அதிகாரங்களையும், கடமைகளையும். கருமங்களையும் நிறைவேற்றுவதற்காக எழுத்துமூல சட்டக்கோவை ஒன்றின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரையும்,
"தகனசாலைப் பொறுப்பாளர்" எனப்படுவது தகனசாலை ஒன்றின் பொறுப்பாளராகக் கடமையாற்றுவதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஒருவரையும்,
"இறந்த உடல்" எனப்படுவது மனிதனது உயிர் பிரிந்த உடல் அல்லது இறந்த உடலின் ஒரு பகுதி அல்லது உயிரற்ற நிலையில் பிறந்த ஒரு உடலையும் குறிப்பிடும்.

சொற்கள் தொடர்பில் கருத்து பேதங்கள் ஏற்படின், இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களுள் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை - "அ"**

உடபலாத்த பிரதேச சபையின் தகனசாலையில் இறந்த உடலொன்றைத் தகனம் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

01. விண்ணப்பிப்பவரது முழுப்பெயர் :----.
முகவரி :----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
கிராம அலுவலர் பிரிவு :----.
02. இறந்தவரது பெயர் :----.
வசித்த இடத்தின் முகவரி :----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
கிராம அலுவலர் பிரிவு :----.
03. விண்ணப்பிப்பவருக்கும் இறந்தவருக்கும் உள்ள உறவு :----.
04. இறப்புச் சான்றிதழின் இலக்கமும் திகதியும் :----.
05. இறப்பைப் பதிவுசெய்த பதிவுகாரரின் பெயரும் முகவரியும் :----.
06. இறப்பு நடைபெற்ற விதம் :----.
07. இறப்பு தொடர்பாக விசாரணை நடைபெற்றதாயின் அதன் திகதியும் நேரமும் :----.
08. விசாரணை செய்த அலுவலரது பெயரும் பதவியும் :----.
09. விசாரணை அதிகாரியின் முடிவு :----.
10. இறந்த உடலைத் தகனம் செய்ய அனுமதி வழங்குகின்றாரா என்ற விபரம் :----.
11. தகனம் செய்வதற்கான திகதியும் நேரமும் :----.
12. தொலைபேசி இலக்கம் :----.

மேற்குறித்த தகவல்கள் அனைத்தும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். தகனச் சான்றிதழ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

----,
விண்ணப்பிப்பவரது கையொப்பமும்
திகதியும்.

திகதி :----.

**அலுவலகப் பாவனைக்கு மட்டும்**

1. அனுமதிப்பத்திரத்தை வழங்க அனுமதிக்கிறேன்/ அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்கின்றேன்.

----,
கையொப்பம்,
தலைவர்/அதிகாரம் பெற்ற அலுவலர்.

திகதி :----.

செயலாளர்,
................ பிரதேச சபை.

2. .................... ஆந் திகதிய ........................ ஆம் இலக்க பற்றுச்சீட்டின்படி ரூபா ........................... அறவிடப் பட்டுள்ளது.

3. வேண்டுகோளை நிறைவேற்ற விதப்புரை செய்கின்றேன்/ அதனை நிராகரிக்கின்றேன்.
4. வேண்டுகோளை நிராகரிப்பதற்கான காரணங்கள்.

............,
இலிகிதரது கையொப்பம்.

திகதி :----.

8-786/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.